අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/03/56/02/03

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2022.01. 12

..........................................

..........................................

..........................................

**'கல்வியின் நோக்குகள்' (Education Perspectives) ஆய்வுச் சஞ்சிகை வெளியீடு – 2022**

கல்வி அமைச்சானது 'கல்வியின் நோக்குகள்' எனும் ஆய்வுச் சஞ்சிகையின் அடுத்த தொகுதிகளுக்காக கல்விசார் ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளில் ஈடுபடுகின்ற ஆய்வாளர்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகளை கோருகின்றது. இதன் முதன்மை நோக்கமாவது பொதுக் கல்வித்துறையின் நவீனமயமாக்கல் மற்றும் கல்வியின் பண்புத்தர விருத்திச் செயற்பாட்டில் முக்கியத்துவம் பெறுகின்ற சிறந்த ஆய்வு முடிவுகளை வெளியிடுவதாகும்.

தேசிய மட்டத்தில் கல்வி தொடர்பான ஆர்வலர்களுக்கு பொருத்தமான ஆய்வு கட்டுரைகளை வெளியிடுவதற்கு இடமளிக்கப்படுகின்றது. உதாரணமாக பண்புத்தரத்தில் சிறந்து விளங்குகின்ற ஆய்வுக் கட்டுரைகள், அளவீட்டு அறிக்கைகள், ஆய்வு அறிக்கைகள், தாக்க மதிப்பீடுகள் மற்றும் நிலைமைப் பகுப்பாய்வுகள் என்பன வரவேற்கப்படுகின்றன.

**கைப்பிரதிகள் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளுள் விரும்பிய மொழிமூலத்தில் முன்வைக்க முடிவதோடு, இதன்போது கவனத்தில்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் மறுபக்கத்தில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

கையளிக்கப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகள் இதற்கென நியமிக்கப்படுகின்ற நிபுணத்துவம் வாய்ந்த தொகுப்பாளர் சபையின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். மதிப்பீட்டுச் சபையின் விமர்சனம் மற்றும் கருத்துக்களுக்கு ஏற்ப தேவையான மீள் திருத்தங்களைச் செய்து மீண்டும் பிரதியைத் தயாரித்து முன்வைப்பதற்காக ஆய்வுகள் உரிய ஆய்வாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். உரிய ஆய்வுக் கட்டுரை வெளியீட்டிற்காகத் தெரிவு செய்யப்படின் அது தொடர்பாக ஆய்வாளருக்கு அறிவிக்கப்படும்.

ஆய்வுச் சஞ்சிகைக்காக முன்வைக்கப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகள் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டவையாக இருத்தல் ஆகாது என்பதோடு இக் கட்டுரைகளை வெளியிடுவதற்கு இணையாக வேறெங்கும் முன்வைக்கவோ அல்லது வெளியிடவோ இடமளிக்கக்கூடாது என்பது இவ்வெளியீட்டுக்கான நிபந்தனையாகும். கைப்பிரதியை கையளிப்பதன் மூலம் வெளியிடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அவ் ஆய்வுக் கட்டுரைகளினை வெளியிடும் உரிமை எடுத்தாளரிடம் இருந்து வெளியீட்டாளருக்கு கைமாறுகின்றதென்பதற்கான இணக்கப்பாடாக கருதப்படும். வெளியீட்டுரிமையின் மூலம் வெளியீட்டுரிமை உடையவரிடம் இருந்து எழுத்துமூல அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது மீண்டும் அச்சுப்பதித்தல், Micro film முறையில் பிரதி எடுத்தல் அல்லது வேறு எந்தமுறையிலும் மீண்டும் அச்சுப்பதிப்பதற்கு அல்லது பகிர்ந்து கொள்வதற்கு உள்ள சகல உரிமைகளும் தடை செய்யப்படும்.

'கல்வியின் நோக்குகள்' சஞ்சிகையின் அடுத்த பதிப்புகளில் கட்டுரைகளை வெளியிடுவதற்கு ஆர்வமுள்ள தங்கள் நிறுவனத்தின் / மாகாணத்தின் ஆய்வாளர்களிடம் இச் செய்தியைத் தெரியப்படுத்துமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

இது தொடர்பில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கின்றேன்.

M. M. Wehella

கலாநிதி எம்.எம். வேஹல்ல
மேலதிக செயலாளர் (கொள்கை, திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு)
கல்விச் செயலாளருக்காக

**'கல்வியின் நோக்குகள்' ஆய்வுச் சஞ்சிகைக்காக ஆய்வுக் கட்டுரைகளை முன்வைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

இதற்கு முன்னர் இது தொடர்பாக உள்வாங்கப்பட்டுள்ள சகல ஆலோசனைகளையும் விஞ்சியதாக இவ் ஆலோசனை 2022.01.01 ஆம் திகதி முதல் நடைமுறையிலிருக்கின்றது.

பெயர் அல்லது எழுத்தாளர் தொடர்பாக எந்த தகவல்களும் தழுவல் ஆவணத்தைத் தவிர கையேட்டின் எந்த இடத்திலும் குறிப்பிடப்படுதல் ஆகாது.

பின்வரும் விபரங்கள் தழுவல் கடிதத்தின் மூலம் முன்வைக்கப்படல் வேண்டும்.

- எழுத்தாளர் தொடர்பான விபரங்கள் (பெயர், பதவி போன்றன)
- தொடர்பு ஏற்படுத்தக் கூடிய வழிகள் தொடர்பான விபரம் (தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி போன்றன)
- எழுத்தாளர் தொடர்பான சுருக்கமான விபரங்கள் (கல்வித் தகைமைகள், வெளியீடுகள் போன்றன)

1. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் முன்வைக்கப்படுகின்ற ஆவணங்களின் உள்ளடக்கம் பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - I. ஆய்வுச் சுருக்கம் - பிரதான சொற்கள் (Key words) மூன்று உட்பட 150 - 200 சொற்கள் – ஆங்கில மொழிபெயர்ப்பும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்,
   - II. அறிமுகம் - ஆய்வுப் பிரச்சினை, ஆய்வுப் பின்னணி, ஆய்வின் நியாயப்பாடு
   - III. இலக்கிய மீளாய்வு - கோட்பாடு மற்றும் ஆய்வு ரீதியான பின்புலம்
   - IV. ஆய்வு முறையியல் - நோக்கம், நோக்கங்களை அடைவதற்கான உபாயங்கள், தரவுகளை சேகரிக்கும் முறை, பகுப்பாய்வு மற்றும் விளக்கம்
   - V. கலந்துரையாடல் - பொருள் விளக்கம் மற்றும் கண்டறிதல்கள்
   - VI. முடிவுரை
   - VII. கருத்துரை மற்றும் சிபாரிசுகள்

   **முழுமையாக ஆய்வுக் கட்டுரையின் சொற்கள் 6000 இற்கும் மேற்படாதவாறு அமைதல் வேண்டும்.**

2. குறிப்புகள், படங்கள், புகைப்படங்கள், வரைபடங்கள், வரைபுகள் போன்றன (கூடியபட்சம் 4) அச்சுப்பதிப்பதற்கு பொருத்தமான உயர் தன்மை கொண்டதாகவும் வெளியீட்டு உரிமை தொடர்பான பிரச்சினைகள் அற்ற விதத்திலும் முன்வைக்கப்படல் வேண்டும். ஒரு பக்கத்திற்கு மேற்பட்டதான நீண்ட புள்ளிவிபரங்கள் அடங்கிய அட்டவணைகள் இலக்கமிடப்பட்டு கட்டுரையின் இறுதியில் இணைப்பாக முன்வைக்கப்படல் வேண்டும்.

3. அடிக்குறிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதோடு ஆவணத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள இலக்கமிடப்பட்டுள்ள இணைப்புக் குறிப்புக்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

4. உசாத்துணை நூல்களின் பட்டியலினை ஆவணத்தின் இறுதியில் இணைக்கும் போது அமெரிக்க உளவியலாளர் சங்கத்தின் (APA) ஆறாவது கையேட்டுப் பதிப்பில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகள் பின்பற்றப்பட வேண்டும். (தயவுசெய்து www.bibme.org/citation-guide என்ற இணையத் தளத்தில் 'Useful guide to APA Format' என்ற தலைப்பின் கீழ் உள்ள மாதிரிகளைப் பார்க்கவும்.)

5. பக்கத்தின் அளவு மற்றும் வடிவமைப்பு பினவருமாறு அமைதல் வேண்டும்.
   A4 அளவான கடதாசியின் இருமருங்கும் (Margin) 25 mm இடைவெளி கொண்டதாகவும் வரிகளுக்கிடையே இரட்டை இடைவெளி கொண்டதாகவும் தனிப்பக்கத்தில் அச்சிடப்படல் வேண்டும்.
   கணினி எழுத்து : தலைப்பு : 16pt  உப தலைப்பு: 14 pt  உரை விளக்கம்: 12 pt
   சிங்களம் : FMAbhaya  தமிழ் : Kalaham  ஆங்கிலம் : Times New Roman

6. பிரதிகளை சமர்ப்பித்தல் : Hard Copy இரண்டு, Soft copy ஒன்று (MS Word) (PDF Format அல்லாதவாறு தயாரிக்கப்பட்டதாக) **2022 மார்ச் 15**ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
   கல்விப் பணிப்பாளர்
   ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை,
   கல்வி அமைச்சு,
   இசுருபாய,
   பலவத்த
   பத்தரமுல்ல.

மென் பிரதியை research4d.moe@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிகளுக்கு இணைப்பாக அனுப்பி வைக்க முடியும். (கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக வன் பிரதியினை சதர்ப்பிக்க முடியாதிருப்பின் மென் பிரதியினை முதலில் அனுப்பி வைத்து பின்னர் வன் பிரதியினை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.